Cr. No: 02/2024

(Under Section 173 BNSS)

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040828

Cr.No. 02/2024

காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கள்ளக்குறிச்சி 02.07.2024

1. District மாவட்டம்: கள்ளக்குறிச்சி PS காவல்நிலையம்: ல.ஒ.த.க. பிரிவு Year ஆண்டு: 2024 FIR No. முத.அ. எண்: Date நாள்:

2. (i) Act சட்டம்: PC Act 1988 As Amended Sections பிரிவுகள்: 7 of Prevention of
   (ii) Act சட்டம்: in PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: Corruption Act 2018
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 13.06.2024 Date to : நாள் வரை 01.07.2024
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.07.2024 Time : நேரம் 07.45 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 கி.மீ. வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலகம் சிறுவங்கூர் கிராமம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் இரா. சக்திவேல் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இராமசாமிபிள்ளை
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 48 வயது (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி எண் 03/29, முருகன் கோவில் தெரு இரங்கநாதபுரம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. சம்பத், கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், கள்ளக்குறிச்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக ஏழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
02.07.2024, 10.15 hrs

Name: பெயர் I. ARUNRAJ
Rank: நிலை INSPECTOR of Police
V&AC, KLK.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

Submitted: On 02.07.2024 at about 07.45 hrs, while I was in my office, one Tr.R.Sakthivel, Age 48/2024 approached my detachment office and lodged a computer typed complaint which read as follows:- அனுப்புநர் இரா.சக்திவேல், வயது 48/2024, த/பெ இராமசாமி பிள்ளை, எண்.3/29, முருகன் கோவில் தெரு, இரங்கநாதபுரம், கள்ளக்குறிச்சி மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், இலஞ்ச ஒழிப்பு துறை, கள்ளக்குறிச்சி ஐயா, நான் இரங்கநாதபுரம் கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி சுதா என்ற மனைவியும், சத்தியா, சரண்யா ஆகிய இரண்டு மகள்களும் உள்ளார்கள். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் கோவிந்தசாமி, சண்முகம் என இரண்டு அண்ணன்கள், எங்கள் அனைவருக்கும் திருமனமாகி நாங்கள் தனிதனியாக வசித்து வருகிறோம். எங்களது பூர்வீக சொத்தை 2013-ம் ஆண்டு கள்ளக்குறிச்சி இணை சார்பதிவாளர்-2 மூலம் பத்திர எண்.2418/2013-ன் படி நாங்கள் மூவரும் பாகபிரிவிணை செய்து கொண்டோம். அதன் படி ''C'' ஷெட்டியூல் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துகளை நான் அனுபவம் செய்து வருகிறேன். இந்நிலையில் ''C'' ஷெட்டியூலில் காண்பிக்கப்பட்டு உள்ள சொத்துகளில் சிறுவங்கூர் கிராம எல்லையில் அபு.சர்வே எண்.269/5 ல் 37 ஏர்ஸ் விஸ்தீரனம் உடைய 55 செண்ட் நிலத்தை எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய 06.06.2024-ம் தேதி ஆன்லைனில் விண்ணப்பித்து இருந்தேன். என் விண்ணப்பத்தின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் இல்லாததால் 13.06.2024-ந்தேதி தொடர்புடைய ஆவணங்களுடன் சிறுவங்கூர் VAO அலுவலகத்திற்கு நேரில் சென்று பார்த்தேன். அப்போது VAO சம்பத் அவர்கள் ஆவணங்களை பார்த்துவிட்டு, என்னிடம் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு, மேலதிகாரியெல்லாம் கவனிக்க வேண்டியது உள்ளது. அதற்கு பணம் கொஞ்சம் செலவு பண்ணாதான் உனது பெயருக்கு எந்த பிரச்சனையும் இல்லாமல் பட்டா பெயர் மாறுதல் செய்ய முடியும் என்று என்னிடம் சொன்னார். நான் எவ்வளவு செலவு ஆகும் என்று கேட்டேன். அதற்கு VAO ரூ.30,000/- பணம் கொடுத்தால் உன்னுடைய வேலையை முடித்து தருகிறேன் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் சார் நான் விவசாயம் செய்து வருகிறேன், என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியாது கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன், அதற்கு VAO பணம் கொடுத்தால்தான் வேலை முடியும் என்று கறாராக கூறிவிட்டார். நானும் பணம் புரட்ட எனக்கு தெரிந்த நபர்களிடம் கேட்டு பார்த்தேன் என்னால் அவர் கேட்ட தொகையை புரட்ட இயலவில்லை, இந்நிலையில் 27.06.2024-ந்தேதி என் கைபேசிக்கு வருவாய் துறையில் இருந்து ஒரு குறுச்செய்தி வந்தது,

அதில் நான் மூலப்பத்திரம் நகல் சமர்பிக்காததால் மனு நிராகரிக்கபடுகிறது என்று இருந்தது. நான் இது சம்மந்தாமாக எங்கள் ஊர் VAO-வை 28.06.2024-ந்தேதி பார்த்தேன். அதற்கு அவர் திங்கள்கிழமை வந்து என்னை பார்க்குமாறு கூறிவிட்டார். அவர் கூறியதுபோல் 01.07.2024-ந்தேதி அவரை சென்று நேரில் பார்த்தேன் அப்போது அவர் நீங்கள் மீண்டும் விண்ணப்பித்து விட்டு நாளை நான் கேட்ட பணம் ரூ.30,000 தயார்செய்து கொண்டு வந்து என்னை பாருங்கள் என்று சொன்னார். நான் மீண்டும் அவரிடம் என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் தற்போது முன்பணமாக ரூ.10,000/- பணம் கொடு, வேலை முடித்தவுடன் மீதி பணம் ரூ.20,000/-கொடு இல்லை என்றால், உனது இணையவழி மனுவை மீண்டும் நிராகரிக்க பரிந்துறை செய்துவிடுவேன் என்று கண்டிப்பாக சொன்னார். நான் அவரிடம் சரிங்க சார் பணத்தை ரெடி செய்து கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தபோது VAO-க்கு இலஞ்சம் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய விருப்பம் இல்லாததால் சிறுவங்கூர் VAO மீது இலஞ்ச ஒழிப்பு துறையிடம் புகார் கொடுக்கலாம் என முடிவு செய்து 02.07.2024-ந்தேதி தங்களிடம் இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். எனவே பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுக்க ரூ.30,000/- இலஞ்சம் கேட்டு, முன் பணமாக ரூ.10,000/- கேட்கும் சிறுவங்கூர் VAO மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் இப்படிக்கு, ஒப்பம் (ரா.சக்திவேல்) நாள் 02.07.2024 இடம் கள்ளக்குறிச்சி.

Sir,

Received the above written complaint on 02.07.2024 at about 07.45 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Kallakurichi Vigilance and Anti-Corruption in Cr.No.02/2024/AC/KLK u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended in the Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.15 hrs today on 02.07.2024 sd xxxxxx on 02.07.2024 (E.Arunraj) Inspector of Police, V&AC, KLK.

E. ARUNRAJ.
INSPECTOR OF POLICE
V & AC, Kallakurichi